தமிழ் மின் மரபுடைமைத் திட்டக் குழுவின் புதிய சேவை

# நிகழ்ச்சி மோதல்களைத் தவிர்க்க ஒரு முயற்சி

“தமிழ் மின் மரபுடைமைத் திட்டக் குழுவினர் தொடங்கியுள்ள இந்த சேவை உண்மையிலேயே மிகவும் பயனுள்ளது. இதை அனைத்து அமைப்புகளும் சரியாகப் பயன்படுத்தினால் ஒரே சமயத்தில் பல நிகழ்ச்சிகள் நடைபெறுவதைத் தவிர்க்கலாம்.

**திரு நா.ஆண்டியப்பன்**
**தலைவர், தமிழ் எழுத்தாளர் கழகம்**

சிங்கப்பூரில் தமிழ் சமூக நிகழ்ச்சிகளின் எண்ணிக்கை ஆண்டுக்காண்டு அதிகரித்துக் கொண்டு வருவதை தமிழ் ஆர்வலர்கள் நன்கு அறிவர். மொழிப்பற்றை வளர்ப்பதற்கும், மொழித் திறனை அதிகரித்துக் கொள்வதற்கும், அதனை வாழும் மொழியாக வைத்திருப்பதற்கும் இந்த அதிக எண்ணிக்கையிலான நிகழ்ச்சிகள் உதவுகின்றன.

அது வரவேற்கப்படக்கூடிய ஒன்று என்றாலும் ஒரு பிரச்சினை தலைதூக்கி நிற்கிறது. ஒரே நாளில், சில சமயங்களில் ஒரே நேரத்தில் பல நிகழ்ச்சிகள் நடக்கும் நிலைதான் அந்தப் பிரச்சினை.

அந்தப் பிரச்சினையைக் களைய அல்லது ஓரளவுக்குக் கட்டுப்படுத்த ஒரு புதிய முயற்சியை பொங்கல் தினமான நேற்றுமுன்தினம் அறிவித்திருக்கிறது தமிழ் மின்மரபுடைமைக் குழு.

தமிழ் சமூக நிகழ்வுகளுக்கு ஏற்பாடு செய்வோர் முன்கூட்டியே அது குறித்த தகவல்களைப் பதிவு செய்யும் வசதிதான் அந்த முயற்சி. ஏற்பாட்டாளர்கள் மிக எளிதாக அந்தப் பதிவைச் செய்யலாம்.

http://goo.gl/forms/jRUa2XNzUT என்ற இணைய முகவரிக்குச் சென்று தேவையான தகவல்களைத் தெரிவிக்க வேண்டும். அந்தத் தகவல்கள் பின்னர் http://www.singaporetamil.sg என்ற சிங்கப்பூர்த் தமிழ் இணையப் பக்கத்தில் வெளியிடப்படும். அதனைப் பார்த்து மற்ற நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்கள் தங்கள் நிகழ்ச்சி தேதி, நேரம் போன்றவற்றை நிகழ்ச்சி மோதல்கள் ஏற்படாதவாறு நிர்ணயித்துக்கொள்ளலாம்.

ஒரே நாளில் பல நிகழ்வுகள் நடப்பதைத் தவிர்க்க இது ஒரு சிறு முயற்சி.

எந்த அமைப்பையும் சாராத தமிழ் மின்மரபுடைக் குழுவின் இந்த முயற்சிக்கு அனைவரின் ஆதரவும் கிடைத்தால் ஏற்பாட்டாளர்களும் பலன் பெறுவர், வருகையாளர்களும் பலன் பெறுவர் என்று மின்மரபுடமைக் குழு தெரிவித்தது.

அந்தக் குழுதான் சிங்கப்பூரின் பொன்விழாவை முன்னிட்டு சிங்கப்பூரில் கடந்த 50 ஆண்டுகளில் பதிப்பிக்கப்பட்ட தமிழ் நூல்களை மின்மயமாக்கி அதை நாட்டுக்கு அன்பளிப்பாக கடந்த ஆண்டு வழங்கியது.

பொங்கலன்று வெளியிடப்பட்ட அந்த அறிவிப்புக்கு நல்ல வரவேற்பு கிடைத்துள்ளது. அந்த முயற்சியை முழுமையாக ஆதரிக்கும் சிங்கப்பூர் தமிழ் எழுத்தாளர் கழகத்தின் தலைவர் திரு நா.ஆண்டியப்பன், “தமிழ் மின் மரபுடைமைத் திட்டக் குழுவினர் தொடங்கியுள்ள இந்த சேவை உண்மையிலேயே மிகவும் பயனுள்ளது. இதை அனைத்து அமைப்புகளும் சரியாகப் பயன்படுத்தினால் ஒரே சமயத்தில் பல நிகழ்சசிகள் நடைபெறுவதைத் தவிர்க்கலாம்.

அனைத்து அமைப்புகளும் நிகழ்ச்சிகளுக்கு நாள் குறிப்பதற்கு முன் இந்த இணையத்தளத்தில் பார்த்துவிட்டு நாள் குறித்தால் பயனளிக்கும். ஆகவே அனைத்து அமைப்புகளும் இதனைப் பின்பற்ற வேண்டும் என்பதே எனது வேண்டுகோள். ஆனால் அதே நேரத்தில் ஒரே நேரத்தில் அல்லாமல் ஒன்றன்பின் ஒன்றாக சில நிகழ்ச்சிகள் நடைபெறுவதைத் தவிர்க்க முடியாது என்றே கருதுகிறேன்.

மாதாந்திர சிறு நிகழ்ச்சிகள் தவிர்க்க முடியாத காரணங்களால் மாற்றி வைக்கப்படும் சூழ்நிலை ஏற்படும்போது அது நிகழலாம். அந்த நிகழ்ச்சிகள் குறிப்பிட்ட சில வட்டத்தினருக்கு மட்டுமே நடத்தப்படுவதால் பெரிய பாதிப்பு ஏற்பட்டு விடாது என்றே நினைக்கிறேன்,” என்று கூறினார்.

அதே கருத்தை ஆமோதித்தார் தமிழ் ஆர்வலரும் எழுத்தாளருமான திரு ஏ.பி.ராமன்.

“இவ்வாறு செய்வதன் வழி, ஒரே நாளில் பல நிகழ்வுகள் நடப்பதை ஓரளவு தடுக்க முடியும் என்பது எனது நம்பிக்கை.

“நம் அமைப்புகளும், மற்ற நிகழ்ச்சித் தயாரிப்பாளர்களும் ஆதரவு தந்தால், நாம் நடத்தும் கூட்டங்களுக்கு உண்மையிலேயே கூட்டம் வருவதை உறுதி செய்யலாம்.

“இந்த முயற்சியில் ஈடுபாடுகாட்டி, இத்தகைய ஓர் ஏற்பாட்டை நிறுவிய சிங்கப்பூர்த் தமிழ் மின்மரபுடமைக் குழுவினருக்குப் பாராட்டுகள்,” என்றார் அவர்.

இணைய முகவரியில் பதிவதைத் தவிர்த்து thiyagaramesh007@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கும் தங்கள் நிகழ்ச்சிகள் குறித்த தகவல்களை ஏற்பாட்டாளர்கள் அனுப்பி வைக்கலாம்.

# தைப்பூச நிகழ்வுகளைக் கொண்ட புகைப்படப் புத்தகம்


திரு ரமேஷ் ராமகிருஷ்ணன் ஐயர்



திரு ரிச்சர்ட் சீ.

புகைப்பட ஆர்வலர்கள் இருவர் ஒன்று சேர்ந்து தைப்பூச நிகழ்வுகளில் பவனி வரும் வண்ணக் காவடிகள் முதல் பக்தர்களின் பக்தி பரவசம் வரை ஒன்று விடாமல் தங்களது புகைப்படக் கருவியில் பதித்துள்ளனர்.

2013ஆம் ஆண்டு ‘கேமரா ரென்டல் சென்டர்’ என்னும் புகைப்படக் கருவிகளை வாடகைக்கு விடும் நிறுவனம் ஏற்பாடு செய்திருந்த கைப்படப் போட்டி ஒன்றில் கலைஞர் ரிச்சர்ட் சீயும், புகைப்பட ஆர்வலர் ரமேஷ் ராமகிருஷ்ணன் ஐயரும் சந்தித்தனர். அதன் பின்னர் அந்த ஆண்டு நடந்த தைப்பூசத் திருவிழா நிகழ்வைப் படம்பிடிக்க சென்றிருந்தபோது இருவரும் மீண்டும் சந்தித்துக்கொண்டனர். புகைப்படக் கலையில் ஆர்வம் கொண்ட இருவரும் நல்ல நண்பர்களாயினர்.

திரு சீ 1985ஆம் ஆண்டில்தான் முதன் முதலாக தைப்பூசத் திருவிழா நிகழ்வில் புகைப்படமெடுக்கும் அனுபவத்தைப் பெற்றார். அப்போது அவர் ‘தி பிசினஸ் டைம்ஸ்’ நாளேட்டில் செய்தியாளராகப் பணிபுரிந்தார். அவர் பிடித்த படங்களைச் செய்தியுடன் வெளியிட்டிருந்தார். என்ன வேலை இருந்தாலும் தைப்பூசத் திருவிழாவை மட்டும் திரு சீ, தவறவிட்டதில்லை. ஒவ்வொரு தைப்பூசத் திருவிழாவிலும் படமெடுக்கும் அதிர்ஷ்டத்தைப் பெற்ற திரு சீ, 2004ஆம் ஆண்டு மட்டும் உடல்நிலைப் பாதிப்பால் தைப்பூசத் திருவிழாவைப் படம்பிடிக்க முடியவில்லை என்று தப்லாவுக்கு அளித்த பேட்டியில் தெரிவித்தார்.

அவரது நண்பர் திரு ரமேஷ், 2004ஆம் ஆண்டு முதல் தைப்பூசத் திரு விழா நிகழ்வினைப் படம்பிடித்து வருகிறார். வெளிநாடுகளுக்குச் சென்று இயற்கைக் காட்சிகளையும், பற்பல நிகழ்வுகளையும் படம் பிடிப்பதில் இவருக்கு ஆர்வம் அதிகம். இந்தோனீசியா, இலங்கை, ஹாங்காங், சாபா ஆகிய இடங்களுக்குச் சென்று பல அற்புதமான படங்களைப் பிடித்திருக்கிறார். அவர் பிடித்த புகைப்படங்களில் பலவற்றை கட்டுரைகளுடன் புத்தகங்களாகவும் வெளியிட்டிருக்கிறார்.




சிங்கப்பூரைச் சேர்ந்த புகைப்பட ஆர்வலர்கள் இருவரும் ஒன்றிணைந்து ‘Thaipusam: An Exploration Of Faith, Devotion And Surrender’ என்ற தலைப்பிலான புத்தகம் ஒன்றை வெளியிட முடிவெடுத்தனர். முதன்முதலில் திரு ரமேஷ்தான் இதற்குப் பரிந்துரைத்தார். திரு சீயும் அதே எண்ணத்தில் இருந்ததால் அவரது பரிந்துரையை திரு சீ மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொண்டார்.

இந்த ஆர்வலர்கள் இருவரும் படம்பிடித்த தைப்பூச நிகழ்வின் அற்புதக் காட்சிகளை கவிதை நடை விளக்கத்துடன் இந்தப் புத்தகத்தில் காணலாம். விலை $88. கடந்த 12 ஆண்டுகளில் திரு சீ எடுத்த தைப்பூசப் படங்களும் ஆறு ஆண்டுகள் திரு ரமேஷ் எடுத்த புகைப்படங்களும் இந்தப் புத்தகத்தில் இடம்பெற்றுள்ளன.


ஜனவரி 21ஆம் தேதி வியாழக்கிழமை இரவு 7.00 மணிக்கு இப்புத்தகம் வெளியீடு காணவுள்ளது. இடம்: வாட்டர்லூ ஸ்திரீட்டில் உள்ள இமேஜினி கேலரி. இந்தப் புத்தக வெளியீட்டைத் தொடர்ந்து ஜனவரி 22ஆம் தேதி முதல் 26ஆம் தேதி வரை பிற்பகல் முதல் இரவு 7 மணி வரை புகைப்படக் கண்காட்சியும் நடைபெறவுள்ளது.

வேலையிடத்தில் விபத்தா? சாலை விபத்தா?
நோட்டரி பப்ளிக் முன் கையெழுத்திட வேண்டுமா? அனைத்துக்கும் நீங்கள் நாடவேண்டிய அனுபவமிக்க சட்ட நிறுவனம்

**YEO PERUMAL MOHIDEEN LAW CORPORATION**

*(Formerly known as YPMP LAW CORPORATION)*
Advocates & Solicitors Commissioner for Oaths and Notary Public
**1 Coleman Street #06-08, The Adelphi, Singapore 179803**
**(Near City Hall MRT, Next to High Court)**
இலவச முன் ஆலோசனைக்கு எந்நேரமும் தொடர்புகொள்ள:
**திரு. பெருமாள் 9668 9297 - திரு. மொகிதீன் 9833 7872**
**திரு. சரவணன் 9238 6084 - திரு. கமல் 9873 5720**

**நாடி பார்த்து நாட்டு வைத்திய முறையில் சிகிச்சை(மூலிகை மருந்துகள்)**
ஞாபக சக்தி, உடல் வளர்ச்சி, தலைவலி, வயிற்று வலி, இருமல், சளி, சரும பாதுகாப்பு, ஈறுகள் வலு, வீரியம், மாதவிலக்கு மற்றும் பெண்களின் தனிப்பட்ட பிரச்னைகளுக்கும் மிகவும் உகந்தவை. வயது வரம்பின்றி ஆண்கள், பெண்கள் மற்றும் சிறார்களுக்கு ஏற்றது.
• மூட்டு, இடுப்பு, கழுத்து, கை கால் வலிகளுக்கு மூலிகை எண்ணெய் கொண்டு மசாஜ் செய்யப்படும் • மலைத்தேன் • காயகல்பம் • மூலிகை சாம்பிராணி • பிராமி மெமரி டானிக் /மாத்திரை, போகர் புஸ்தி டானிக் • விஷ்ணு • குமரி • பாலாஜி • சர்மா • ஃகாப்கியூர்/தூது • அகஸ்தியர் கூந்தல் தைலம் • டூத் பவுடர், தந்த வாயு • சஞ்சீவி ஹெல்த் பூஸ்டர் • Dia - B, • புட்டரின் டானிக் கலந்தாலோசிக்க கைராசி மருத்துவர்கள் திருமதி ஷீலாவையும், திரு. கேசவனையும் (ஆண்மைக் குறைவு சிகிச்சை) சந்தியுங்கள். •ஆண்களுக்கு - காமவீரன் • பெண்களுக்கு -வசீகரிவர்த்தினி.
நம்பிக்கையே நோய்க்கு நிவாரணம்
**சித்த மருத்துவ மற்றும் ஆயுர்வேதிக் (பி) லிட்.**
**25 MADRAS STREET, SINGAPORE 208420**
**TEL: 6297 8569 / 6297 5730**



**Krishnan Sivanandam & Co.,**
(Established in 1985)
**Advocates & Solicitors**
தொலைபேசி:
**6533 1411 / 6533 1419** தொலைப்பிரதி: **6536 6909**
101 அப்பர் கிராஸ் ஸ்திரீட்,
#04-17A பீப்பிள்ஸ் பார்க் செண்டர்,
சிங்கப்பூர் 058357
Commissioner for Oaths, Notary Public
எல்லா சட்ட சேவைகளுக்கும் எங்களை அணுகலாம்.

# வைரமுத்து: வள்ளுவரைக் கொண்டாடி முகவரி சேர்ப்போம்

திருவள்ளுவர் தினத்தை முன்னிட்டுக் கவிஞர் வைரமுத்து நிறுவனர் தலைவராக உள்ள வெற்றித்தமிழர் பேரவை சார்பில் சென்னைப் பெசன்ட் நகரில் உள்ள திருவள்ளுவர் சிலைக்கு மாலை அணிவித்துத் திருவள்ளுவர் திருநாள் கொண்டாடப் பட்டது.

விழாவில் கவிஞர் வைரமுத்து பேசியதாவது.

திருவள்ளுவர் தமிழினத்தின் பெருமை; அவரை உயர்த்திப் பிடிப்பதன் மூலம் தமிழர்கள் தங்கள் உயரத்தை உயர்த்திக் கொள்கிறார்கள். ஒவ்வோர் இனத்திற்கும் நில அடையாளம், மொழி அடையாளம், கலை அடையாளம், கலாசார அடையாளம் உண்டு. தமிழ் இனத்தின் அறிவு அடையாளமாக கருதப்பட வேண்டியவர் திருவள்ளுவர். திருவள்ளுவரை நாம் மறந்துவிடவும் கூடாது; இழந்துவிடவும் கூடாது.

பிரிட்டிஷ் சாம்ராஜ்ஜியத்தையே இழந்தாலும் இழப்போம். ஷேக்ஸ்பியரை இழக்கமாட்டோம் என்ற புகழ்பெற்ற பிரிட்டிஷ் வாசகம் உண்டு. ஆனால் ஷேக்ஸ்பியர் பிறப்பதற்கு 1,500 ஆண்டுகளுக்கு முன்பே உலக மானுடத்தைச் சிந்தித்த ஞானப் பேராசான் திருவள்ளுவர்.

அவரை கொண்டாடுவதன் மூலம் நாம் நம் உலக முகவரியை எழுதிக்கொள்கிறோம்.

திருக்குறளுக்கு இந்திய அளவில் அங்கீகாரம் பெற்றுத்தர தருண் விஜய் எம்.பி. போராடி வருகிறார். அவர் தாம் சார்ந்திருக்கும் கட்சியை வளர்ப்பதற்குத்தான் திருவள்ளுவரை கையில் எடுத்திருக்கிறார் என்று சில அறிவாளிகள் கூடக் கருதுகிறார்கள்.


திருவள்ளுவர் திருநாளையொட்டி வெற்றித் தமிழர் பேரவையின் சார்பாக சென்னை பெசன்ட் நகரில் உள்ள திருவள்ளுவர் சிலைக்குக் கவிஞர் வைரமுத்து மாலை அணிவித்தார். விழாவில் சென்னைப் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் திருவாசகம், வெற்றித்தமிழர் பேரவைப் பொதுச் செயலாளர் மரபின் மைந்தன் முத்தையா உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். **படம்: வெற்றித்தமிழர் பேரவை**

ஜி.யு.போப், கால்டுவெல்—வீரமாமுனிவர் போன்ற கிறிஸ்தவ அறிஞர்கள் தமிழ்ப்பணி ஆற்றிய போது அவர்கள் மதத்தை வளர்க்கத்தான் தமிழைக் கையிலெடுக்கிறார்கள் என்று யாரும் பழி சொல்லவில்லை.

தருண் விஜய் ராமரை தென்னாட்டுக்குக் கூட்டி வரவில்லை; திருவள்ளுவரைத்தான் வடநாட்டுக்கு அழைத்துச் செல்கிறார். ஒருவேளை அரசியலுக்குத்தான் திருவள்ளுவர் பயன்படுத்தப்படுகிறார் என்பதில் கொஞ்சம் உண்மை இருக்குமானால் தமிழ் நாட்டில் எந்த அரசியலும் திருவள்ளுவரை முன்னிறுத்தித்தான் நடக்கமுடியும் என்பது மெய்யாகிறது. அதுவே திருவள்ளுவருக்குக் கிடைத்த பெருவெற்றி தானே.

தமிழர்களின் அடையாளங்கள் அழிக்கப்படுவதைத் தமிழர்கள் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள். ஜல்லிக்கட்டுக்குத் தடைவிதிக்கக் கூடாது. ஜல்லிக்கட்டு என்பது பிற்கால வார்த்தை. ஏறுதழுவுதல் என்பதே மூலத்தமிழ்ச்சொல். ஏறு தழுவுதல் என்பது எப்படி வன்முறையாகும்?

இதுவரைக்கும் ஏறுதழுவுதல் விளையாட்டில் மனிதர் கள்தான் காயப்பட்டிருக்கிறார் களே தவிர மாடுகள் காயப்பட வில்லை. ஏறு தழுவாத ஒரு இளைஞனை நான் தழுவமாட்டேன் என்று தான் கலித்தொகையில் ஒரு தமிழச்சி பாடுகிறாள்.

எனவே தழுவுதல் என்பது வன்முறையற்றது என்றுதான் தமிழர்களால் கருதப்படுகிறது,” என்றார் அவர்.